## சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – 2021-2022 ஆம் நிதியாண்டு ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் கல்வி பயிலும் மூளை முடக்குவாதத்தினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிறப்பு நாற்காலிகள் (Corner Seat) வழங்குதல் – அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

## மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2)த் துறை

அரசாணை (ப) எண்.01

நாள்: 16.02.2022
பிலவ, மாசி 4,
திருவள்ளுவர் ஆண்டு, 2053.

படிக்கப்பட்டது :

1. அரசாணை (ப) எண். 23, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2)த் துறை, நாள் 03.10.2019.
2. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடித எண்.9181/உ.உ-பிரிவு/2021, நாள் 04.01.2022.

******

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டு ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் பயிற்சி பெறும் மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு சுமார் ரூ.3,000/- என்ற விலையில் 500 சிறப்பு நாற்காலிகள் (Corner Seat) 2019-2020 ஆம் நிதியாண்டில் வழங்கிட ரூ.15.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் 2021-2022 ஆம் நிதியாண்டின் வரவு செலவுத் திட்டத்தில் மூன்று சக்கர சைக்கிள் உட்பட 13 வகையான உபகரணங்கள் கொள்முதல் செய்து 2020-2021 மற்றும் 2021-2022 ஆகிய இரண்டு நிதியாண்டுகளில் தேர்வுச் செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கிட ரூ.4.98 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி 13 உதவி உபகரணங்களுக்கான செலவினம் மற்றும் கொள்முதல் ஆணை வழங்கப்பட்ட தொகை ரூ.4.88 கோடி போக மீதத்தொகை ரூ.10 லட்சம் உள்ளது என்றும் எனவே, 2019-2020 ஆம் நிதியாண்டில் ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் கல்வி பயிலும் மூளை முடக்குவாதத்தினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ரூ.15.00 இலட்சம் மதிப்பில் 518 எண்ணிக்கையிலான சிறப்பு நாற்காலிகள் உதவி உபகரணங்களுக்கான கணக்குதலைப்பில் கொள்முதல் செய்யப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் 2021-2022 ஆம் நிதியாண்டிலும் ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் கல்வி பயிலும் மூளை முடக்குவாத்தினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளில் மேற்படி சிறப்பு சக்கர நாற்காலிகள் வழங்கப்படாமல் விடுபட்டுள்ள குழந்தைகளுக்கும் சிறப்பு நாற்காலி வழங்கிட தற்போது உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தில் மீதமுள்ள 10 லட்சத்தில் திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி முறையில் தேர்வு செய்யப்பட்ட நிறுவனத்திற்கு

183 எண்ணிக்கையிலான சிறப்பு நாற்காலிகள் கொள்முதல் செய்வதற்கு அனுமதி மற்றும் ஆணையினை வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்காணும் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் செயற்குறிப்பினை நன்கு பரிசீலினை செய்த அரசு அதனை ஏற்று, ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் கல்வி பயிலும் மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு 2019-2020 ஆம் நிதியாண்டில் சிறப்பு சக்கர நாற்காலிகள் (Corner Seat) வழங்கப்பட்டுள்ள நிலையில், சிறப்பு சக்கர நாற்காலிகள் வழங்கப்படாமல் விடுபட்டுள்ள குழந்தைகளில் 183 பயனாளிகளுக்கு சிறப்பு சக்கர நாற்காலிகள் (Corner Seat) வழங்கிட அனுமதியும் மற்றும் ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும்:-

"2235 - சமூகப் பாதுகாப்பும் நலனும் - 02 சமூக நலன் - 101 - மாற்றுத் திறனாளிகள் நலன் - மாநிலச் செலவினங்கள் - CO - மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டம் - 319- இயந்திரமும் சாதனமும் - 01 - வாங்குதல்"

IFHRMS (த.தொ.கு.2235-02-101-CO-31901)

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண்.5715நிதி(ச.ந)/2022, நாள் 11.02.2022-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆர். லால்வேனா,
அரசு செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர், சென்னை–5.
அனைத்து மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்கள்,
(மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.

<u>நகல்:-</u>
நிதி (சந)த் துறை, சென்னை–9.
அரசு செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச் செயலாளர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

16/02/2022.
பிரிவு அலுவலர்